# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033649

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் V & AC Dgl Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 2 Date: நாள் 29.4.18

2. (i) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15.4.18 to 26.4.18
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.4.18 Time : நேரம் 12.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 23 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அருவாய் ஐய்யனார் அலுவலகம் பலக்கனூத்து, இலைச்சந்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. இந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சின்னச்சாமி ரெட்டியார் (late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி பெரியநாயக்கன்பட்டி, கோவமுத்தூர், நாயக்கர் சந்தமநாயக்கன்பட்டி, இடையபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. குப்புத்தாய் அருவாய் ஐய்யனார் பலக்கனூத்து, திண்டுக்கல் மேற்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கிறேன்:திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 26.04.2018ம் தேதி காலை 12.00 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது இருப்பு: கோயம்புத்தூர், பெரியநாயக்கன்பாளையம், வித்யாலயா தோட்டம், குறிஞ்சி நகர், எண்.1ல் வசித்துவரும் (லேட்)சின்னச்சாமிதேவர் மகன் C.இந்திரன், பூர்வீகம்: சந்தமநாயக்கன்பட்டி, தெத்துப்பட்டி கிராமம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் என்பவர் தனது மாமன் மகன் திரு.நாகராஜன் என்பவருடன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாரித்ததில் வாதியின் தந்தை திரு.சின்னச்சாமிதேவர் அவர்கள் கடந்த 02.03.2005ம் தேதி இறந்து விட்டபடியால் அவரது பெயரில் உள்ள நிலத்திற்கு பட்டா மாறுதல் பெற, திரு.சின்னச்சாமிதேவர் அவர்களின் வாரிசுகளான (1) இந்திரன் (2) (லேட்) திருமதி.மகமாயி அம்மாள், (3) திருமதி.கலா, (4) திருமதி.ராணி, (5) (லேட்) திரு.ராஜேந்திரன் (6) (லேட்) திரு.வெள்ளைத்தேவர் மற்றும் (7) (லேட்) திருமதி பொன்னம்மாள் ஆகியோர்களின் பெயருக்கு வாரிசு சான்று பெற திண்டுக்கல் பலக்கனூத்து வருவாய் ஆய்வாளர் திரு.குப்பாத்தாள் அவர்கள் வாதியிடம் லஞ்சமாக ரூ.7,000/- கேட்டதாக இருந்தது. மேற்படி புகாரின் நகலை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதின் பேரில் பூர்வாங்க விசாரணை PE.No.121/2018/Rev/DL, நாள்: 26.04.2018-ன்படி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் P.E.No.121/2018/REV/DL, நாள்:26.04.2018-ன்படி பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் செயலாக தலைமைக்காவலர் 1192

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

இந்திரன்

29/4/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.4.18

Name: பெயர் R.B...
Rank: நிலை ......... No. எண் ...

<u>திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:2/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

திரு.P.செந்தில்குமார் அவர்களை அனுப்பி பலக்கனூத்து அலுவலகத்தில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று எதிரி திருமதி.குப்பாத்தாள் அவர்களை சந்தித்து வாதியிடம் லஞ்சப்பணம் கேட்பது சம்மந்தமாக குரல் பதிவு செய்ய அனுப்பப்பட்டது. அதன்படி வாதி திண்டுக்கல் மாவட்டம் மூலச்சத்திரத்தில் உள்ள பலக்கனூத்து வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று எதிரியை சந்தித்தபோது நடந்த உரையாடல்கள் குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் ரூ.7,000/- கேட்பது சம்மந்தமான வாதியின் புகார் மனுவின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு வாதி மற்றும் எதிரி ஆகியோர்களின் முன் நடத்தை பற்றியும் விசாரணை செய்தும், காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலை 29.04.2018ம் தேதி மாலை 04.00 மணிக்கு பெற்றும், மேற்படி வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால் 29.04.2018ம் தேதி மாலை 17.00 மணிக்கு திண்டுக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.02/2018, பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், நான் கோயம்புத்தூர் பெரியநாயக்கன்பாளையத்தில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்து வருகின்றேன். எனக்கு 2 ஆண் மற்றும் 1 பெண் குழந்தைகள் உள்ளனர். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. கையொழுத்து போடுவேன். நான் கோவை பெரியநாயக்கன்பாளையம் இராமகிருஷ்ணா ஆசிரமத்தில் கூலி வேலை செய்து வருகிறேன். எனது தந்தை திரு.சின்னச்சாமிதேவர் அவர்கள் கடந்த 2.03.2005 தேதி இறந்துவிட்டார். அவருக்கு எனது தாயார் திருமதி.மகமாயி அம்மாள், எனது அக்கா திருமதி.கலா, திருமதி.ராணி, எனது அண்ணன் திரு.ராஜேந்திரன், மற்றும் நான் ஆகியோர் வாரிசுகளாவோம். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலம் 1ஏக்கர் 15 சென்ட் நிலம் தெத்துப்பட்டி கிராமம், சந்தமநாயக்கன்பட்டியில் எனது தந்தையின் பெயரில் உள்ளது. மேற்படி இடத்தினை எங்கள் பெயரில் பட்டா மாறுதல் பெற, எனது தந்தை திரு.சின்னச்சாமிதேவர் அவர்களின் வாரிசுகளான (1) நான், (2) எனது தாயார் (லேட்) திருமதி.மகமாயி அம்மாள், (3) எனது அக்கா திருமதி.கலா, (4) திருமதி.ராணி, (5) எனது அண்ணன் (லேட்) திரு.ராஜேந்திரன், (6) எனது தாத்தா (லேட்) திரு.வெள்ளைத்தேவர் மற்றும் (7) எனது பாட்டி (லேட்) திருமதி பொன்னம்மாள் ஆகியோர்களின் பெயருக்கு வாரிசு சான்று தேவைப்பட்டது. அதற்காக எங்கள் ஏழு நபர்களையும் வாரிசாக சேர்த்து வாரிசு சான்று கேட்டு, எனது பெயரில் ஒரு விண்ணப்பத்தினை எழுதி சென்று கடந்த 09.4.2018ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்தினை எனது மாமா திரு.நாகராஜ் அவர்கள் எழுதிக்கொடுத்தார். அங்கிருந்தவர்கள் அதைப் பெற்று ஒரு முத்திரை செய்து, சம்பந்தப்பட்ட தெத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் பலக்கனூத்து கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் கொடுத்து விடுவதாக தெரிவித்ததின் பேரில் நான் கோவை பெரியநாயக்கன்பாளையம் இராமகிருஷ்ண ஆசிரமத்திற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு மூன்று நாட்கள் கழித்து தெத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் பலக்கனூத்து கிராம நிர்வாக அலுவலர் தனது போன் மூலம் எனது போன் எண்ணிற்கு அழைத்து எனது மனு சம்மந்தமாக விசாரிக்கவேண்டி இருப்பதால் என்னை சந்தமநாயக்கன்பட்டிக்கு வருமாறு அழைத்ததின் பேரில் நான் மூன்று நாட்கள் கழித்து எனது ஊருக்கு வந்தேன். பின்பு தெத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் பலக்கனூத்து கிராம நிர்வாக

அலுவலர் அவர்கள் எங்கள் ஊருக்கு வந்து மனுவின் உண்மைத் தன்மை குறித்து விசாரித்து எங்கள் ஊரில் வசிக்கும் இரண்டு நபர்களிடம் கையொப்பம் பெற்று, பரிந்துரை செய்து பலக்கனூத்து வருவாய் ஆய்வாளரிடம் கையொப்பம் பெற்று கொடுக்கும்படி சொல்லி மனுவை என்னிடமே கொடுத்து அனுப்பிவிட்டார். அதனை பெற்ற நான் அன்றே பலக்கனூத்து வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்களிடம் மாலை சுமார் மூன்று முப்பது மணிக்கு கொடுத்தேன். அந்த மனுவை பெற்றுக்கொண்ட அவர் எங்கள் ஊரைச் சேர்ந்த இரு நபர்களை விசாரணைக்கு அழைத்து வரச்சொன்னார். அப்போது வருவாய் ஆய்வாளர் தெரிவித்தபடி எங்கள் ஊரைச் சேர்ந்த எம்.ஜி என்ற பின்னத்தேவர் மற்றும் அலெக்ஸ் பாண்டியன் ஆகிய இருவரையும் போன் மூலம் வருவாய் அலுவலகத்திற்கு வரும்படி கூறினேன். அவர்கள் வந்தவுடன் அன்றைய தினமே அவர்களை விசாரித்து கையொப்பம் பெற்றுகொண்டார். மேலும் மனுவை பெற்றுக்கொண்ட அவர், உங்கள் மனு சம்பந்தமாக எனது அறிக்கையினை மேலே அனுப்பி வாரிசு சான்று கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். அதற்கு ரூ.7,000/- பணம் கொடுங்கள் என்று கேட்டார். நான் உடனே இது கவர்மெண்ட்டுக்கு கட்டணுமா என்று கேட்டேன். அதற்கு வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்கள் உங்களுக்கு விவரமில்லை, உங்களுக்கு வாரிசு சான்று கிடைக்க எனக்காகும் செலவு என்று கூறினார். நான், அவ்வளவு பணம் கொண்டுவரவில்லை என்று சொல்லி, பிறகு வருகிறேன் என்றுக் கூறி வந்துவிட்டேன். பின்பு பணம் புரட்ட முடியவில்லை, பின்பு இரண்டு நாட்கள் கழித்து மேற்படி வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்களுடைய போன் எண் 9751419105ல் இருந்து என்னுடைய போன் எண் 8148810751க்கு அழைத்து, நான் கேட்ட பணம் என்னாச்சு, உடனே ஏற்பாடு செய்து வந்து என்னை பாருங்கள் என்று கூறினார். இல்லாவிட்டால் மனுவை தள்ளுபடி செய்து விடுவேன் என்று கூறினார். அதற்கு நான் பணம் ரெடி பண்ணிக்கொண்டு இருக்கிறேன். ரெடியானவுடன் வந்துவிடுகிறேன் என்று கூறினேன். பின்பு பணம் புரட்ட முயன்றும் முடியவில்லை. அதன்பின்பு 25.04.2018ம் தேதி நான் கோயமுத்தூரில் இருந்தபோது மீண்டும் வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்கள் போன்செய்து பணம் ரூ.7,000/- ரெடி பண்ணி கொண்டு வாருங்கள் என்று கூறினார். உடனே நான் தெத்துப்பட்டி கிராமம் சந்தமநாயக்கன்பட்டிக்கு கிளம்பி வந்து எனது மாமன் மகனாகிய பண்ணப்பட்டி கோம்பைச் சேர்ந்த நாகராஜ் அவர்களிடம் மேற்படி விபரம் சொல்லி பணம் கேட்டேன். அதற்கு அவர், தற்போது அவ்வளவு பணம் என்னிடமில்லை என்றுக் கூறி, அதிகாரியிடம் குறைச்சு கேட்கவேண்டியது தானே என்று சொன்னார். 26.04.2018ம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு மீண்டும் வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்கள் எனக்கு போன்செய்து நான் கேட்ட பணம் ரூ.7,000/- ரெடி பண்ணியாச்சா எனக் கறாராகக் கேட்டார். அவர் கேட்ட பணம் ரூ.7000/- உடன் வந்து பார்க்கும்படியும், அவ்வாறு இல்லை என்றால் உங்கள் மனுவை கிடப்பில் போட்டுவிடுவேன் என்று கோபமாக பேசினார். பின்பு இது சம்மந்தமாக எனது சகோதரர், சகோதரிகளிடம் வருவாய் ஆய்வாளர் ரூ.7,000/- லஞ்சம் கேட்பது பற்றி தெரிவித்தேன். அவர்களும் வருத்தப்பட்டனர். பின்பு எங்களது பெயரில் வாரிசு சான்று பெற தனது சிபாரிசினை செய்து பெற்றுத்தர ரூ.7,000/- லஞ்சமாக கேட்ட பலக்கனூத்து வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து வாரிசு சான்று பெற விரும்பவில்லை. எனவே வருவாய் ஆய்வாளர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இன்று (26.04.2018) பகல் 12.00 மணிக்கு நான், எனது மாமன் மகன் நாகராஜீடன் வந்து இந்த புகார் மனுவினை கொடுக்கின்றேன். இந்த மனுவினை நான் சொல்ல எனது மாமா மகன் நாகராஜ் அவர்கள் தயார் செய்தார். மேலும், வருவாய் ஆய்வாளர் திருமதி.குப்பாத்தாள் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.7,000/-ஐ வைத்துள்ளேன். இம்மனுவுடன் என்னுடைய விண்ணப்பத்துடன் இணைத்துக் கொடுத்த எனது தந்தையின் இறப்புச் சான்றிதழின் நகல், எனது ஆதார் மற்றும் குடும்ப அட்டையின்

நகல் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/xxxxxx திரு.C.இந்திரன், சாட்சி.. நாகராஜன், S/o.S.பாலுச்சாமி, T.கோம்பை, பண்ணப்பட்டி (P.O), கன்னிவாடி, திண்டுக்கல்(மே) Sir, Received the complaint on 26.04.2018 at 12.00 hrs and the same was intimated to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai for necessary orders, Sd/-xxx Tmt.R.Geetha, 26.04.2018, Inspector of Police, V&AC., Dindigul, As per the orders of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.121/2018/Rev/DL, dated:26.04.2018, a preliminary Enquiry was conducted regarding the complaint. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.02/2018, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 29.04.2018 at 17.00hrs. Sd/xxxx R. Geetha, 29.04.2018, Inspector, V&AC., Dindigul. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/4/18
Inspr V&AC
Dgl.